# ஹைக்கூ திண்ணை

செப்டம்பர் / அக்டோபர் 2022



இதழ் தொகுப்பாளர்

**கவிஞர் Dr ஜலீலா முஸம்மில்**

இதழ் 13

# ஹைக்கூ திண்ணை

மின்னிதழ் 12 செப்டம்பர் / அக்டோபர் 2022


ஆசிரியர் :

கா.ந.கல்யாணசுந்தரம்



வடிவமைப்பு :
தமிழ்நெஞ்சம் அமின்

நிர்வாகி

ராஜ் ஆரோக்கியசாமி



ஆசிரியர் குழு :

அனுராஜ்
முனைவர் வே.புகழேந்தி
ரசிகுணா
சாரதா க.சந்தோஷ்
அன்புச்செல்வி சுப்புராஜ்
இளவல் ஹரிஹரன்








ஆலோசகர்கள் :

தமிழ்நெஞ்சம் அமின்
குமரன் அம்பிகா
யுகபுத்திரன்
முனைவர் ம.ரமேஷ்







https://www.facebook.com/groups/HSWTP100

**தமிழ்நெஞ்சம்**

&

**உலகத் தமிழ் ஹைக்கூ கவிஞர்கள் மன்றம்**

இணைந்து வழங்கும் "ஹைக்கூ திண்ணை"

ஆசிரியரின்

# திண்ணைப்பேச்சு

வணக்கம் அன்பர்களே...!

நமது ஹைக்கூ திண்ணை மின்னிதழ் வழக்கம்போல சிறந்த வடிவமைப்புடன் வெளிவந்துள்ளது. பிரான்சு தமிழ்நெஞ்சம் அமின் அவர்களின் சிறந்த இதழ்ப்பணியால் இந்த மின்னிதழ் சிறப்பான அம்சங்களுடன் வெளிவந்துள்ளது. கவிஞர்கள் தமது ஹைக்கூ, லிமரைக்கூ, ஹைபுன் கவிதைகளை தொடர்ந்து உலகத் தமிழ் ஹைக்கூ கவிஞர்கள் மன்றத்தில் பதிவிட்டு வருவது மகிழ்வளிக்கிறது.

இந்த மின்னிதழை கவிஞர் ஜலீலா முஸம்மில் அவர்கள் இலங்கையிலிருந்து பணியாற்றி தொகுத்து வழங்கியுள்ளார்கள். சிறப்பான தொகுப்பாக இந்த மின்னிதழ் மின்னுகிறது. புதிய பல கவிஞர்களுக்கு இடமளித்து ஹைக்கூ உலகுக்கு அடையாளம் காண்பித்துள்ளார் இந்த இதழின் தொகுப்பாசிரியர் கவிஞர் டாக்டர் முஸம்மில் .. அவருக்கு நமது நெஞ்சார்ந்த நன்றி.

முந்தய இதழ்களைப் பற்றிய சிலரது பின்னூட்டங்களை இந்த இதழில் வெளியிட்டுள்ளோம். இனி வரும் இதழ்களிலும் வெளியாகும்.

உங்களது வாசிப்பும், ஆய்வுரைகளும் பின்னூட்டத்தில் கொடுத்து எங்களுக்கு உற்சாகமூட்டுங்கள். அதுவே தமிழ் ஹைக்கூ கவிதைகளின் வளர்ச்சியும் ஆகும்.

பங்குபெற்றுள்ள கவிஞர்கள் அனைவருக்கும் இனிய வாழ்த்துகள்.

அன்பன்,

**முனைவர் கா. ந. கல்யாணசுந்தரம்**
ஆசிரியர் மற்றும் குழுவினர்.

# தொகுப்பாளர் உரை

## மருத்துவர் ஜலீலா முஸம்மில்

ஏறாவூர், இலங்கை



அனைவரையும் அன்பால் விழித்தவளாக..

ஹைக்கூ திண்ணை செப்டம்பர்/ ஒக்டோபர் மின்னிதழைத் தொகுக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததில் மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகிறேன். இந்தப் பெறுமதியான வாய்ப்பை வழங்கிய கவிச்சுடர் கல்யாணசுந்தரம் ஐயா அவர்களுக்கு முதற்கண் எனது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைச் சமர்ப்பிக்கிறேன்.

ஹைக்கூ என்றால் என்ன, அதை விளங்கிக் கொண்டு அதன் விதிமுறைகள் பற்றி அறிந்து அதன்படி எழுத எல்லோரும் முனைகின்றார்களா என்பது கேள்விக்குறியே. சிலர் இலக்கண விதிமுறைக்கேற்ப ஹைக்கூ கவிதைகளை எழுதுகின்றனர். ஆனாலும் சிலர் இலக்கண விதிகளைக் கொஞ்சம் மீறிப் புதுமையாக, வித்தியாசமாக எழுதுபவர்களாக இருக்கிறார்கள்.

மொழி என்பது ஒரு இனத்தின் அடையாளமாகும்.

பண்பாடு கலாச்சாரம் நாகரீகம் போன்றவற்றின் பிரதிபலிப்பாக அது இருக்கிறது. உலகளாவிய மொழிகளில் தனிச்சிறப்புக் கொண்ட தமிழ்மொழியில் இதுவரை ஆயிரக்கணக்கான இலக்கிய நூல்கள் வந்து பெருமைப்படுத்தி உள்ளன. ஆயினும் இன்று உலகின் கவிஞர்கள் பலரால் நேசிக்கப்படும் ஒரு கவி வடிவம் ஹைக்கூ தான் என்பது அசைக்க முடியாத உண்மை. இன்று தமிழில் மக்கள் இலக்கியமாக இது கொண்டாடப்பட்டு வருவதைக் காணலாம்.

ஹைக்கூ என்பது மூன்று வரிகளுக்குள் முழுப் பிரபஞ்சத்தையும் அடக்கக் கூடியது. சிறு துளி ஒன்று பெரியதொரு காட்சியை தனக்குள் உள்ளடக்குவது போல மூன்றே வரிகளில் சமூக அவலங்களைப் படம் பிடித்துக் காட்டக் கூடியதும், படிப்பினைகளைச் சொல்லக் கூடியதுமாக அமைகிறது. தூரத்து நிலாவைக் கைகளுக்குள் கொண்டு வரும் வித்தைகள் தெரிந்தது. மூன்று வரிகளுக்குள் எண்ணற்ற தத்துவங்களைச் சொல்லக்கூடியது என்றே கூறலாம்.

ஆரம்ப காலத்தில் ஐக்கூ கவிதை ஒக்கூ (hokku, ஃகொக்கூ) என்றே அழைக்கப்பட்டது. பின்னர் ஐகை என்று திரிந்து ஐக்கூ என்று அழைக்கப்பட்டது. ஐக்கூ என்றால் அணுத்தூசி போன்ற சிறிய கவிதை என்று பொருள் படுவதாக அமைகிறது. இக்கவிதையின் பெயரை ஹொக்கு என்று பாரதியார் தன் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். ஐ + கூ = ஐக்கூ ; ஐ = கடுகு ; கூ = உலகம் கடுகு போல் சிறிய கவிதை வடிவில் உலகளாவிய கருத்துக்களைச் செறிவுடன் செறித்து வைக்கச் செப்பு போல் இடந்தரும் கவிதை வடிவே ஐக்கூ என்றும் பொருள் கூறுகின்றனர்.

பருவநிலை மாற்றங்களை வாழ்வியல் உண்மைகளோடு ஒட்டி வைத்து எழுதுவதே ஹைக்கூ. காட்சிகளைப் படிமம் ஆக்குவதில் தேர்ந்து காணும் எதையும் புகைப்படம் எடுப்பது போல அழகாகச் சொல்லெனும் தூரிகைக் கொண்டு வரையும் ஓவியமே ஹைக்கூ.

ஹைக்கூ கவிதை ஆனது பொருட்செறிவும் இனிமையும் ஆழமும் கொண்டது. வாசகர்களைச் சிந்திக்கத் தூண்டி எங்கெல்லாமோ அழைத்துச் செல்லும் வலிமை கொண்டது. ஹைக்கூ கவிதைகளில் மயங்காதவர்கள் இல்லை எனலாம். சிறு வரிகளில் தன்னடக்கத்தோடு பாரிய அர்த்தத்தை உள்வாங்கி தன்னகத்தே கொண்டு இருக்கின்றன

ஹைக்கூ கவிதைகள். ஒவ்வொரு வாசகனையும் ஒவ்வொரு விதமாக சிந்திக்கச் செய்து புதுமை செய்கிறது.போதை தருகிறது என்றே சொல்லலாம்.

புத்தமதப் பிரிவாகிய ஜென் தத்துவத்தை பரப்புவதற்காக உருவான கவிதை வடிவமே ஹைக்கூ எனச் சொல்லப்படுகிறது. ஜென் தத்துவம் என்பது வாழ்க்கையை அதன் போக்கில் விட்டு விடுதலும், இயல்பாக இருத்தலும் ஆகும். நமக்கு அவசியம் இல்லாதவற்றை ஒருபோதும் வாழ்க்கையில் அனுமதிக்காதே என்று பறைசாற்றுகிறது ஜென் தத்துவம். எண்ணங்களைத் தடை செய்ய வேண்டாம், அது தன் பாட்டுக்கு வந்து போகட்டுமே என்கிறார்கள் ஜென் குருமார்கள். சொல்ல வந்ததை எத்தனை தூரம் சுருக்கமாக அழுத்தமாக சொல்லி இருக்கிறோம் என்பது தான் முக்கியம் என்கிறார் ஹைக்கூ கம்பர் பாஷோ அவர்கள்.

ஹைக்கூ கவிதைகள் தமிழிலே அதிகமான பெயர்கள். துளிப்பா, குறும்பா, சிந்தர் கரந்தடி விடுநிலைப்பா, மின்மினிக் கவிதை, வாமணக் கவிதை, அணில்வரிக் கவிதை என்று பலராலும் காரணப்பெயர்களாக அழைக்கப்படுகின்றன.

1916 ம் ஆண்டு வங்கக் கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் அவர்கள் ஜப்பான் சென்றாராம். திரும்பி வந்ததும் ஹைக்கூக்கவிதையில் மயங்கி அதைப்பற்றி ஒரு பத்திரிக்கையில் கட்டுரை எழுதினாராம். அதைப் படித்த நமது மகாகவி பாரதியார் மனதைப் பறிகொடுத்து அதைப் பற்றியே ஆர்வமாய் அதே ஆண்டு அக்டோபர் மாதம் 16ம் தேதி சுதேசமித்திரன் பத்திரிக்கையில் ஒரு கட்டுரை எழுதினாராம்.இதுவே தமிழுக்கு ஹைக்கூ கவிதைகள் வந்த முதல் அறிமுகமாக அறியப்படுகிறது.

மகாகவி பாரதியார் தமிழுக்குக் கொண்டு வந்த ஹைக்கூ ஒரு நூற்றாண்டு காலத்தைக் கடந்து இன்றைய கவிஞர்களால் தொடர்ந்தும் எழுதப்பட்டு வருவது சிறப்புக்குரியதாகும்.

இதில்...

சென்ரியு, குக்கூ, பழமொன்றியு, மோனைக்கூ, எதுகைக்கூ, லிமரைக்கூ, விடுகவிக்கூ, மணிக்கூ

என்று எட்டு வகைகள் காணப்படுகின்றன.

ஆரம்பத்தில் கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களின் ஹைக்கூ கவிதைகளில் ஈர்க்கப்பட்டு ஹைக்கூ கவிதைகள் எழுதும் ஆசை இருந்தது. ஆனால் சரியான வழிகாட்டல்கள் கிடைக்கவில்லை. தற்போது இந்திய முகநூல் நண்பர்களின் ஆதரவில் அந்த ஆசை நனவானதில் புளகாங்கிதம் அடைகிறேன். இதழ் தொகுக்கும் இவ்வரிய வாய்ப்பு இவ்வளவு சீக்கிரம் எனக்கு கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கவில்லை. அதற்கான நன்றிகளையும் தெரிவிக்கிறேன்.

இவ்விதழில் இடம்பிடித்த அனைத்துக் கவிச் சொந்தங் களுக்கு வாழ்த்துக்கள். ஹைக்கூ திண்ணையின் ஒவ்வொரு இதழையும் சிறப்பாக வடிவமைத்துத் தருகின்ற பணியைச் செவ்வனே செய்து வரும் பிரான்சு தமிழ்நெஞ்சம் அமின் ஐயா அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். இலக்கியத்துறையில் மிக நீண்ட காலமாக தடம் பதித்து வரும் இவருக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

நான் ரசித்த ஹைக்கூ கவிதைகள் சில உங்கள் பார்வைக்காக...

வில்லோ மரங்கள்
மலையின் முகத்தில்
புருவங்கள் வரைகின்றன !
- அரிகிதா மொரிதகே

பிம்பங்களற்ற தனிமையில்
ஒன்றிலொன்று முகம் பார்த்தன
சலூன் கண்ணாடிகள்
- நா. முத்துக்குமார்

சவைத்துச் சாப்பிட
பிளம் புளிப்பில் மீண்டும்
பிறந்தேன் சிறுவனாக
- சீய்ஷி யாமகுச்சி !

அதோ அந்த உழத்தி
அழும் தனது குழந்தை இருக்கும்
திக்கில் நடுகிறாள் நாற்று !
- இசா

அத்தனை மீன்கள் வலைகளில்
அடுத்த நாள் கடலிலே
அத்தனை அழுகை அலைகளில்
- ஈரோடு தமிழன்பன்

பதினைந்து மொழிபேசும்
ஒரே தாள்.
ரூபாய் நோட்டு.
- டி.ராஜேந்திரன்

குழந்தையின் கையில்
ஆறாம் விரல்
பென்சில்.
- நாணற்காடன்

கோடிகள் கொள்ளை
கேடியாக இருந்து
கம்பி எண்ணுகிறான்
- கவிஞர் இரா .இரவி

வீட்டில் அழைப்பு மணி
அழுத்தினேன்
எட்டிப் பார்த்தது நாய்.
- கன்னிக்கோவில் ராஜா

மருத்துவமனையில் நோயாளி
அதிகம் வலியை உணர்கிறார்
மனைவி.
- இளையபாரதி கந்தகப்பூக்கள்





எட்டிப் பார்த்தேன்
தூக்கிவிடச் சொன்னது
கிணற்றில் விழுந்த நிலா.
-

தன்னுடைய புகைப்படம்
தடவிப் பார்க்கிறான்
கண்ணில்லாதவன்.
- கொள்ளிடம் காமராஜ்

கூரை கிழிசல்களை
குத்திக்காட்டுகின்றன
மழை ஊசிகள்
-மு.முருகேஷ்

பறவை பறக்காத இடமும்
பறந்து அலைகிறது
பறவையின் இறகு.
- அனுராஜ்

மேய்ச்சல் மாடுகள்
வீட்டுக்கு அழைத்து வரும்
இடையனின் குழலோசை
- கவிநிலா மோகன்

ஏற்கனவே சுக்கு நூறாய்
உடைந்திருக்கிறது மனம்
கல்லுடைக்கும் சிறுமி
- கவிச்சுடர் கல்யாணசுந்தரம்

மரத்திலிருந்து சத்தமின்றி
விழுந்து தன்நிழலைத் தொடும்
பழுத்தயிலை
- ஷர்ஜிலா யாகூப்

# தமிழ்நாட்டில் ஹைக்கூ

## – ஸ்ரீவிமுத்துவேல்



*நம் தாய்மொழி தமிழில் மரபுக் கவிதை,புதுக்கவிதை கோலாச்சும் இக்காலகட்டத்தில் ஜப்பானியக் கவிதை வடிவமான ஹைக்கூ கவிதை மீண்டும் வரவேற்பைப் பெற்று மிகவும் பிரபலமடைந்து வருகிறது. இக்கட்டுரையில் ஜப்பானிய ஹைக்கூ வடிவத்திலிருந்து தமிழ்நாட்டில் எழுதப்படும் ஹைக்கூக்கள் எவ்வாறு வேறுபடுகிறது என்பதை விரிவாகக் காண்போம்.*

*ஜப்பானில் மொத்தம் 17 அசைகள் கொண்டதாய் ஹைக்கூ படைக்கப்படுவது வழக்கம். தமிழ் எழுத்துகள் ஜப்பான் மொழியில் இருந்து வேறுபடுவதால் ஹைக்கூவின் வடிவமும் தமிழ்நாட்டில் மாறியே இருக்கிறது.நாம் எழுதும் ஹைக்கூ கவிதை 2-3-2 சொற்கள் அல்லது 2-3-1 சொற்கள் என்ற வடிவத்தில் தான் எழுதப்படுகிறது.*

ஜப்பானிய ஹைக்கூக்களில் ஜென் தத்துவங்களே மிகுந்து இருக்கும் ஆனால் தமிழ் ஹைக்கூகளில் இயற்கை, மனிதநேயம், தமிழ்களின் பண்பாடு கலாச்சாரம் போன்றவற்றைக் கருப்பொருளாகக் கொண்டும் முரண் உத்தி, திருப்ப உத்தி, இருகோண உத்தி, சென்ரியு உத்திகளோடு ஜென் என்பதும் ஒரு வகை உத்தியாகவே கருதப்படுகிறது ஆகையால் நம் தமிழ் ஹைக்களில் ஜென் தத்துவம் என்பது ஒரு உத்தி முறையேத் தவிர அது மட்டுமே ஹைக்கூ ஆகாது.மேலும் லிமரைக்கூ ஹைபுன், லிமர்புன், லிமர்சென்றியு,பழமொன்றியு போன்றவைகளும் தமிழ் ஹைக்கூக்களில் எழுதப்படும் பிற ஹைக்கூ வடிவங்களாகும்.

மக்கள்தொகை அதிகம் கொண்ட நம் நாட்டில் வருங்கால சமுதாயத்திற்கு நம் வாழ்க்கைமுறையை எடுத்துரைக்கும் படி ஹைக்கூ படைத்தலே சிறப்பாகுமென்று நாம் உணர்ந்திருப்பதாகவே புரிய முடிகிறது.

உதாரணமாக களத்துமேட்டை எடுத்துக்கொள்ளலாம். தொழில் நுட்பம் மிகவும் வளர்ச்சியடைந்துள்ள இக்காலத்தில் களத்துமேடு பெரும்பாலும் பயன்பாட்டில் இல்லாமலே இருக்கிறது.

பழங்கால விவசாயத்தில் அறுவடையான பயிர்களை களத்து மேட்டிற்கு தலையில் சுமந்து கொண்டு சேர்ப்பார்கள்.பின்பு கதிரடித்து காற்று அடிக்கும் நேரத்தில் நெல்மணிகளையும் பதர்களையும் பிரித்தெடுப்பார்கள். உழவு மாடுகளைக் கொண்டு

நெற்கதிர்களில் எஞ்சியிருக்கும் நெல்மணிகளை சேகரிப்பார்கள். பிறகு வைக்கோலைக் கொண்டு மாடுகள் வறட்சி நேரங்களில் பசியாறும் வகையில் வைக்கோற் போரை செய்வர். களத்து மேட்டில் சிதறிக் கிடக்கும் நெற்களில் குருவிகளும் பசியாறும்.விவசாயிகள் களத்துமேட்டில் கடுமையாக நீண்டநேரம் உழைப்பார்கள். களத்துமேட்டில் பதர்களும், நெல்மணிகளும் ஆங்காங்கே நெல்மணிகளும்இறுதியில் புதைந்துயிருக்கும். மழைக்காலத்தில் அவைகள் முளைத்து களத்துமேடு பசுமையாகவும் அழகாகவும் காட்சியளிக்கும்.

இந்த அற்புதக்காட்சியை பிரதிபலிக்கும் சில ஹைக்கூக்கள் இதோ

மழைக்குப்பிறகு
முளைத்து இருக்கும்
களத்துமேடு

- ஸ்ரீவி. முத்துவேல்

மேட்டூர் அணை மற்றும் பவானிசாகர் அணை உருவாகுவதற்கு முன்பு அவ்விடத்தில் சில கிராம மக்கள் வாழ்ந்து இருந்ததையும் அங்கு தேவாலயமும் கோயிலும் கட்டி வழிபாடு செய்த மிகப்பெரிய வரலாற்றை மூன்றே அடிகளில் எடுத்துரைக்கும் ஓர் ஹைக்கூ இதோ

குறையும் அணைநீர்
மெல்ல வெளியும் தெரியும்
தேவாலயமும் நந்திச்சிலையும்

- ஸ்ரீவி. முத்துவேல்

இது போல் அகத்திணை தொல்காப்பியம், திருக்குறள் போன்ற நூல்களை ஹைக்கூ வடிவில் எழுதும் முயற்சிகளும் நடத்து கொண்டு தான் இருக்கின்றன.

களத்துமேடு
கயிற்றுக்கட்டிலில் படுத்துறங்கும்
தாத்தாவின் கையில் பனைவிசிறி

- ஹைக்கூ உமா

புலம்பெயர்ந்தோரின்
அவலங்களை சொல்கிறது .
களத்துமேட்டு சுமைதாங்கி/

- கா.ந.கல்யாணசுந்தரம்

●

வெற்று அறைகளை
இருளால் நிரப்பி
பூட்டுடன் வெளியேறும் ஒளி.

●

புல்வெளி
அசைப்போடும் குதிரைகள்
பந்தயக்கால நினைவுகளை.

●

பலகோடி பூக்களின்
ஜனன மரணம்
அடடே! மீண்டும் குறிஞ்சி.

●

இறுதி தினச் சங்கொலியில்
கரைந்து விடுகின்றன
அப்பாவின் பணிநாட்கள்.

●

ஊர்தியிலேயே தங்கிவிடும்
இறுதி ஊர்வலப்பூக்களில் சில
பல ஈக்களுடன்.



- முனைவர் வே. புகழேந்தி.

●

வன்னிமரம்
கிளைகள் முழுதும்
ஏக்க ஊஞ்சல்கள்.



- மணவை கார்னிகன்

●

ஆளற்ற பூங்கா
ஊஞ்சலை ஆட்டுகிறது
ஆடிக்காற்று

●

சிறிய குழி
திறந்தே இருக்கிறது
ஆழ்துளைக் கிணறு



- மதுரகவி

●

தூங்கவில்லை
இரவுமுழுவதும்
இரத்தம் உறிஞ்சும்
கொசு

●

இருட்டில்
தெளிவாக தெரிகிறது
பூனையின் கண்கள்

- தாழை. இரா. உதயநேசன்



•



என்னைப்பற்றி என்ன சொன்னார்களோ
பார்த்ததும் ஆனந்தத்தால் ஆடுகிறது
கடல்

- சோலை பழநி

•



வீட்டுத் தோட்டத்தில்/
வேலி தாண்டி வருகிறது/
வேகமாய்க் காற்று

- செண்பக ஜெகதீசன்

•



பிச்சைக் காரன் தட்டில்
ஊற்றியக் குழம்பு
அந்தி வானம்

- த.ஆ.தாசன்

•

உடல் எடை சரிபார்க்க
குறைந்து வருகிறது
எடை குறைப்பு நம்பிக்கை

•



விளையாடியதும் சதுரங்க காய்கள்
பெட்டிக்குள் அடங்கின
உயிரைப் பிரிந்த உடல்கள்

- மலர் மைந்தன்

●

முற்றத்தில் மழைநீர்
மிதக்கும் காகித ஓடத்தில்
குழந்தை வரைந்த நதி.

- மெய்யன் நடராஜ்



●

குருவிகளின் குதூகலிப்பு.
கொஞ்ச நேரம் நீடிக்கிறது.
வேடன் விரித்த வலையில்.

- சாக்கை.பொன்னழகு.



●

தேங்கிய மழைநீர்
போவதற்கு வழி தேடுகிறது
திசைமாறிய ஆடு

- மு.நாகராஜன், கோயம்புத்தூர்



●

அமோக விளைச்சல்//
அறுவடைக்குத் தயாராகிறான்//
கந்து வட்டிக் காரன் ..

- வே.சுகந்தி



●

கொஞ்சம் கொஞ்சமாக சேகரித்ததை
மொத்தமாக செலவழிக்கிறது
ஊதாரி மேகம் மழையாக..

- வண்ணைவளவன்



•

படுக்கை அறையில்
கேட்டுக் கொண்டிருந்தேன்
தலையணை மந்திரம்.

•



வெள்ள நீர்
வீட்டினுள் புகுந்தது
நீர்ப் பாம்பு.

சோ. ஸ்ரீதரன், இலங்கை

•

மழை நின்ற பின்பும்
இலையில் இருந்து வழிகிறது ...
இன்னொரு மழை

•



அத்தனை பாரமில்லை
வறுமையை விடவும்
தலைமேல் சுமந்த கல்

ச. இராஜ்குமார்

•



பாறைகளில் மோதி
முகங்குப்புற விழுந்தாலும்
ஓடுவதை நிறுத்தாது நதி!

அன்ஸார் எம்.எல்.எம்.

காற்றின்றி புழுக்கம்
ஜன்னலைத் திறந்து வைக்கும்
மரவெட்டி!

சு.கேசவன்



அமருமிடத்திலிருந்து
தள்ளி அமர்ந்தது
இளைபாறும் வண்ணத்துப்பூச்சி

ச.சசிகுமார்



மரத்தடி வீடு
குளுமையாக இருந்தது
மண்பானைத் தண்ணீர்.

மூ.மணி திருமுருகன்



அறுவடை நேரம்
நிலத்தில் வருத்தத்தோடு
அலையும் எலிகள்

சொ.சரவணபவன்



●

பழைய வீடு
புதிதாக உள்ளது
செங்குளவிக் கூடு!

●



மலையடிவார கிராமங்கள்
அருவி செல்லும் வழியில்
குரங்குகளின் சேட்டை!

லா. பெனிஸ் தமிழ்
மருத்துவர், திருநெல்வேலி

●

கறந்த பால்
கலப்படம் இல்லாமல் இருக்கிறது/
குழந்தை சிரிப்பு



ம.பழனிச்சாமி

●



யாருமற்ற பயணத்தில்
கூடவே வரும்
ஒற்றையடிப் பாதை

கவித்தென்றல் சௌ.நாகநாதன்

●

அணைந்த விறகடுப்பு
பற்ற வைக்காமலே புகைகிறது
வீதிக்கலைஞனின் பசி.!



த. ரவீந்திரன்

●

அறுவடைக் காலம்,
நெருங்கி வருகிறது,
மழை மேகம்

அய்ஷத் அப்சத்



●

அசையும் மரக்கிளைகள்
காற்றின் தழுவலில்
நிழலின் நடனம்

மணவை லைவின்



●

படித்த படிப்பு
வீண் போகவில்லை
பெற்றவளின் கண்ணீர்..

சா.கணேஷ் குமார்



●

கோயில் கதவு
திறந்ததும் மூடுகின்றன
இமைகள்...

●

அழகான பூந்தோட்டம்
குழந்தைகளுக்கு பிடிப்பதில்லை
“பூக்களை பறிக்காதீர்” பலகை...

ஐ.தர்மசிங்



●
வைகறைப் பொழுதில்
களத்துமேடு காத்திருக்கிறது
துள்ளும் கன்றுகளுக்காக

●
களத்துமேட்டில்
ஒதுங்கும் தூற்றியப் பதர்கள்
செய்நன்றி மறந்தோர்

●
புலம்பெயர்ந்தோரின்
அவலங்களை சொல்கிறது
களத்துமேட்டு சுமைதாங்கி

●
பருத்தி வயலை விற்று
தெருத்தெருவாக அலைகிறான்
பஞ்சுமிட்டாய்க் காரன்

●
யாரோ வெட்டிய மரம்
காய்ந்து கிடக்கிறது
நிழல் ஓலமிடுகிறது

●
மேடு பள்ளங்களைக்
கடந்தபடி போகிறார்கள்
விடியலைத் தேடி



**கா.ந.கல்யாணசுந்தரம்**

- பூத்த தாமரை
  நீரில் மூழ்கி அமிழ்ந்தது
  தண்டுப் பகுதி

- வானம் பார்த்த பூமி
  கிடைத்த வெடிப்புகளில் குடியேறும்
  வயல் எலிகள்

- அலைமோதும் எண்ணம்
  வலை வலையாய்ப் பின்னும்
  மனக்குழப்பம்

- முதியவர் வாழ்வு
  இளைஞராக மாற வைக்கும்
  எழுதிய கவிதை

- தடுக்கி விழுந்தும்
  மகிழ்வுடன் எழ வைக்கும்
  பொறுக்கிய சங்கிலி



**தமிழ்நெஞ்சம் அமின்**
பிரான்சு

- தோண்டும் குழி
  உள்ளே சரிந்து விழும்
  மர நிழல்

- கூரிய வாள்
  சட்டென வெட்டிச் செல்லும்
  பளீரிடும் மின்னல்

- காலை வெயில்
  முன்னோக்கி ஓடி வரும்
  கடல் நண்டு

- வேலியில் ஓணான்
  தலையை ஆட்டியபடி இருக்கும்
  தஞ்சாவூர் பொம்மை

- பிடித்த நூல்
  தலையாட்டி ரசிக்க வைக்கும்
  பொம்மலாட்டம்

- வானுயர் மின்கம்பங்கள்
  கால்களில் உரசிச் செல்லும்
  தேங்கியநீரில் பிம்பம்



**- வஃபீரா வஃபி**

# ஹைபுன்

மலர்மைந்தன்



கலீல் கிப்ரான் எழுதுகிறார் :

ஒருநாள் வயல்காட்டின் வரப்பில் நின்றுகொண்டு இருந்தேன். என் அருகே சோளக் கொல்லை பொம்மை ஒன்றும் நின்றுக்கொண்டியிருந்தது. வயலில் நின்ற அந்த பயங்கக்காட்டி பொம்மையைப் பார்த்து கேட்டேன் . “இந்த வயலில் இப்படியே காலம் காலமாக நின்று உனக்கு சலித்து விட்டிருக்குமே?”என்று.

அதற்கு அந்த பொம்மை சொன்னது “அப்படி எல்லாம் எதுவும் இல்லை. இந்தப் பறவைகளை அச்சுறுத்துவதில் கிடைக்கும் ஆனந்தம் இருக்கிறதே அது எனக்கு நேரம் போவதே தெரியாமல் செய்துவிடும். பறவைகள் என்னைப் பார்த்து அலறி ஓடும்போது எப்படி இருக்கும் தெரியுமா?.

நான் கொஞ்சநேரம் யோசித்தேன். பிறகு சொன்னேன், “உண்மைதான், இந்த ஆனந்தத்தை நானும் அனுபவித்திருக்கிறேன். நம்மை பார்த்து மற்றவர் மிரளும் போது ஏற்படும் சுகமே தனிதான்”

நம்மில் பலருக்கு உள்ளேயும் ஒன்றும் இருப்பதில்லை, வெறும் ஞான சூன்யமாக இருக்கிறோம். அந்த பொம்மையின் உள்ளே புல்லும் மணலும் இருப்பதுபோல் நமக்குள்ளே எலும்பும் இரத்தமும் இருக்கின்றன. எவராவது ஞானம் பெற்றவர் நம்மீது பரிதாபம் கொள்வார், “இவரின் உள்ளே ஒன்றுமே இல்லையே” என்று.

ஆனால், நாமோ "யார் சொன்னது? அவனைவிட நான் பெரியவன், இவனை மண்டியிட வைத்தேன். அவர்கள் என்னை பாராட்டினார்கள். இவர்கள் என்னைப் பார்த்து மலைத்தார்கள்" என்று மருட்டி, மிளிர வைப்பதிலேயே அளவற்ற சுகம் கண்டு கொண்டிருக்கிறோம்.

உண்மையில் நாமெல்லோருமே அந்த பொம்மை களைவிடவும் பயனற்றவர்கள் என்றுதான் சொல்ல வேண்டும். அவையாவது குறைந்தபட்சம் பறவைகளை விரட்டி பண்டங்களை அழிவிலிருந்து காப்பாற்றுகின்றன.மனிதனோ தனக்கு உள்ளேயும் ஏதுமின்றி தனக்குள் ஏதும் இல்லை என்று உணர்வுகூட இன்றி பிறரிடம்... தான் எல்லாம் இருப்பவன் போல காட்டிக் கொள்ளும் மாயையிலேயே வாழ்ந்து ஒரு அடிகூட முன்னேறாமல் அப்படியே காணாமல் போகிறான்.

குருவியோட்டும் சோளக்காட்டு பொம்மை
பலகாலமாக நிலைத்திருக்கிறது
மனிதர்களிடம் நானெனும் மாயை

---

●
உலக நாடுகளை
வருடம் முழுவதும் சுற்றலாம்
இணையவழி நிகழ்ச்சிகள்..

●
நெடுந்தூரப் பயணத்தில்
ரெயில் பெட்டிகள் சுமக்கின்றன
உறங்காத  கனவுகளை..



**- சாரதா க. சந்தோஷ்**, ஐதராபாத்

●

மனைவியிடமும் முழம்
போட்டு தான் பேசுகிறார்
பூக்கடைகாரர்

அருள்மணி



●

மடித்து இருந்தக் கொடி
விரிந்து பறக்கிறது
சுதந்திர தினம்

அன்புச்செல்வி சுப்புராஜு



●

மலைக்கிராமத்திற்கு செல்லும்
கரடுமுரடான பாதையில்
குறுக்கிட்ட உடும்பு

அகவலன்



●

தேசிய கொடி
சுதந்திரமாகப் பறக்கிறது
கூண்டுப் பறவை

மு.நாகராஜன், கோயம்புத்தூர்.



●

உயர்த்திக்கேட்கிறார்கள்
லஞ்சத்தையும் பிச்சையையும்
விலைவாசி உயர்வு!

-நேசன் மகதி



●

நதியில் வெள்ளம்
மீண்டும் இடம் பெயர்கின்றன
ஓய்வெடுத்த கூழாங்கற்கள்

●

எழுந்த நீரலைகள்
குளத்தில் கரையேறுகின்றன
குளித்த எருமைகள்

●

காலைப் பனித்துளிகள்
பிரியாமல் பூக்களில் ஒட்டியிருக்கும்
தேனுண்ட வண்டுகள்

●

மழையில் நனையும் அருவி
இயற்கை ஈரமாகி இன்பம் பெருகும்
மரத்தில் பதுங்கும் குருவி

●

வெற்றிலைக்கொடி
சுவற்றில் மெல்ல ஏறுகிறது
இரைப்பிடிக்க பல்லி

●

வானிலே கதிரவன்
விடிந்ததும் வெளியே தெரியும்
இரைத்தேடும் கோழிகள்



கவிநிலா மோகன்
தஞ்சாவூர்

●

மையூற்றுப் பேனா
அழகாய் இருக்கிறது
கையெழுத்து/



ரவிஜி...

●

விதி
மிதி வாங்கிக்கொண்டே
ஏற்றிவிடும் ஏணி



ரா.வேலாயுதம் மதுரை


தமிழ்நெஞ்சம்

ஹைக்கூ
கவிதைகளை

எதிர்பார்க்கிறது



editor@tamilnenjam.com





பாலியல் வன்கொடுமை
நீதி கேட்டு போராடும்
பாவையின் கைவிளக்கு

சொ. சரவணபவன்

--



ஏற்றிய விளக்கு
வெளிச்சம்  தருகிறது
கண்தானம்!

சு.கேசவன்

--



கல்வி கற்றலே
பெண்களுக்கு வெளிச்சம் தரும்
ஏற்றிய விளக்கு

பஞ்சநாதன் சின்னா

--



விளக்கை ஏற்றியும்
அவளுக்கு இருட்டாய்த் தெரிகிறது
எதிர் காலம்

இறைச்சிகுளம் கவிஞர்
ந.ந.சங்கரலிங்கம்

--



இருளிலும் ஒளிருகின்றனர்
பிரகாசமாய்
காதல் தேவதைகள்

செந்தூர் குமார்

--

ஹைக்கூ திண்ணை அட்டைப்படம் சூழலுக்கு ஏற்ப
உலகத்தமிழ் ஹைக்கூ கவிஞர்கள் மன்ற முகநூலில்
பதிவிடப்பட்ட ஹைக்கூக்கள் இங்கே இடம் பெறுகின்றன.
அனைவருக்கும் இனிய வாழ்த்துகள்!



பெண்ணின் கைவிளக்கு
பிரகாசமாக ஒளிர்கிறது
கண்களில் தன்னம்பிக்கை

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர், இலங்கை

--



விளக்கின் ஒளி
இருளை அகற்றுகிறது
பெண் கல்வி

மலர் மைந்தன்

--



கைப்பெண் வாழ்க்கை
இருளடைந்து கிடக்கிறது
விளக்கேற்றாத வீடு

கவித்தென்றல் சௌ.நாகநாதன்

--



இல்லத்தின் இருள்
அகல் விளக்கால் அகலும்
இரவின் அச்சம்.

சேந்தன்குடிச் செந்தமிழாழன்
புதுக்கோட்டை.



அழகிய ஓடை
மலையடிவாரம் இருபுறத்திலும்
மோதும் அலைகளில் பூக்கள்

மீன்களின் துள்ளலில்
பாசி விலகத் தெரிகிறது
குளத்திலே வானம்

இரவில் மகிழுந்துப் பயணம
இதமாக இருக்கிறது
இளையராஜா பாடல்

வெட்டப்பட்ட மரம்
திடீரென அசையும்
கூடிழந்த பறவைகள்

காயும் நெல்மணிகள்
வீதியோரத்தில்
உண்ணும் காக்கைகள்

செங்கோட்டை உச்சியில்
பறந்து கொண்டிருக்கிறது
புறாக்களின் கூட்டம்

பழைய வீடு
அழியாமல் இருக்கிறது
பேத்தியின் கிறுக்கல்

உழைத்த தேகம்
ஒட்டிப் போயிருக்கிறது
வியர்வையுடன் சட்டை

மருதாணிக் கை
வாசம் வீசும்
பண்டிகைப் பலகாரம்

கூண்டின் விடுபட்ட பறவை
இஷ்டத்துக்குப் பறக்கிறது
நூலறுந்த பட்டம்

காய்ந்த மரம்
புதிதாகத் துளிர்க்கிறத
மண்ணில் விழுந்த எச்சம்

மின்சாரம் இல்லாத இரவு
இரசிக்கும் படியாக இருக்கிறது
மழைச் சத்தம்

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்
இலங்கை



# சென்ரியு

•

பழுதான போக்குவரத்துசமிக்கை
யாருக்காக எரிகிறதோ
விடுமுறை நாளில்..

•

சண்டையில் ஆரம்பித்தது
சண்டையிலே முடிகிறது
ஊர்த்திருவிழா

•

மலைக்கிராமத்தை
வாக்குப்பெட்டி சென்றடைந்தது
கழுதையில்

•

மலைகிராம நோயாளி
மருத்துவமனைக்கு வருகிறார்
தொட்டிலில்

- ஸ்ரீவி. முத்துவேல்



# ஒரு சாமானியனின் ஹைக்கூ



அரிசியைத் தூவினேன்
இதுவும் ஒரு பாவம்தான்
கோழிகளுக்குள் சண்டை

என்னோட
விளையாட வா
அனாதை குருவியே...

பெட்டிக்கு வந்ததும்
எல்லாமே சமம் தான்
சதுரங்கக் காய்கள்

முதன் முறையாக ஹைக்கூ வழியாக வாழ்க்கையின் யதார்த்ததை நடப்பியலை ஹைக்கூவில் காட்டியவர் இசா...

ஜப்பானில் உள்ள ஷினானோ மாகாணத்தில் காஷிவபரா என்ற ஊரில் 15.06.1763 ஆண்டு யாகோபே - குனி என்பவர்களுக்கு மகனான பிறந்த இசா வின் இயற்பெயர் யதோரா. கோபயாஷி என்பது அவரின் குடும்பப் பெயர். யதோரா மூன்று வயதாக இருக்கும் போது அவரின் தாய் இறந்து விட்டார்.

பாட்டியின் பராமரிப்பில் வளர தொடங்கிய யதோராவை பூசணிக்காய் என்று கிராமத்தினர் அழைப்பதுண்டு.

எட்டாவது வயதில் அவரின் தந்தை சட்சு என்றப் பெண்ணை மறுமணம் செய்து கொண்டார். மாற்றான்னையின் கொடுமை யாலும் வளர்த்த பாட்டியின் மரணத்தினாலும் தனது 14 வயதில் யதோரா எடோ (தற்போதைய டோக்கியோ)என்ற இடத்திற்கு துரத்தப்பட்டார்.

சோகன் மற்றும் சிகுவா என்பவர்களின் கவிதையால் ஈர்க்கப்பட்டு பொருளாதார வசதியில்லாத நிலையிலும் ஹைக்கூ பயிற்சி பள்ளியில் சேர்ந்தார்.. பின்னர் அங்கேயே ஹைக்கூ பயிற்றுநராகவும் தன்னை இணைத்துக் கொண்டார். அங்கு ஹைக்கூ பற்றிய முரண்பாட்டால் அங்கிருந்து வெளியேறி பயணம் மேற்கொண்டார். அப்போது தான் இசா என்றப் பெயரை ஏற்றுக்கொண்டார்.

இசா என்றால் ஒரு கோப்பை தேநீர் என்றும் ராபர்ட் ஹாஸின் சொல்வது போல் தேநீரில் வெளிப்படும் ஒரு குமிழி என்றும் பொருள் படும்...

விளையாட வா
என்னோடு..
அநாதைச் சிட்டுக்குருவியே..

சிறுவயதிலேயே தாயை இழந்தால் தனியாக இருக்கும் சிட்டுக்குருவியை கூட தன் போல அதுவும் அனாதை சிட்டுக்குருவி என்று அழைப்பது. இசா கோபயாஷி வின் உணர்வினை ஏக்கத்தினை பிரதிபலிப்பதாக உள்ளது.

வெவ்வேறு காரணங்களால் பெரும்பாலும் தனிமையில் இருந்த இசா தனது 51 வது வயதில் திருமணம் செய்து கொண்டார்.. ஆனால் அவரது மூன்று குழந்தைகளும் அடுத்து அடுத்து இறந்து போக இசா கோபயாஷி துயரங்களின் தொடமுடியாத தூரங்களுக்கு சென்றார். முதல் மனைவி

விவகாரத்து செய்து பிரிந்து விட இரண்டாம் திருமணம் புரிந்து அவரும் விரைவிலேயே விட்டு பிரிந்து விட்டார்.

தனிப்பட்ட வாழ்க்கையில் ஏற்பட்ட பெரும் ஏமாற்றங்களை துயரங்களை ஹைக்கூ கவிதைகள் மூலமும் அதிக அளவில் வெளிப்படுத்துவார். சிற்றுயிர்களை சிறப்பித்து பாடுவதில் இசா கோபயாஷி சிறந்து விளங்கினார். 20000 க்கும் மேற்பட்ட ஹைக்கூகள் எழுதி உள்ளார்.. பயணக்கவிதைகள் மற்றும் ஹைக்கா எனப்படும் ஹைக்கூ ஓவியங்களும் வரைந்துள்ளார்.

கேள்விக் குறியாகக் குருவி
இங்கும் அங்கும் தேடும் பார்வையோடு
பையைத் தொலைத்ததோ?

என குருவியின் செயலையும் நகைச்சுவையோடு பாடியிருக் கின்றார்.

இயலாமையையும் பரிதாபத்தையும் நகைச்சுவையையும் கலந்து ஹைக்கூகளின் வழியாக நடப்பியலை யதார்த்தமான விடயங்களை ஒரு சாமானியனாக வெளிப்படுத்திய இசா கோபயாஷி குட்டி விட்மன், குட்டி நெருடா என்றும் அழைக்கப்பட்டார்.

தனது 64 வது வயதில் 05.01.1868 பக்கவாதத்தால் இறந்தார். பாஷோ வாழ்வைப் படைத்தார். பூசன் ஓவியம் படைத்தார். இசா நடப்பியலைப் படைத்தார் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.



**ஷர்ஜிலா பர்வீன் யாகூப்**

**கம்பம்**

நன்றிகள்
இணையம்

●
பனிக்காலம்
நிரம்பிய தடாகத்தில் நடுங்கிக் கொண்டிருக்கும்
என் நிழல்

●
என் பாதம் பட்டதும்
என் மனைவியை விட அதிக வெட்கம் தான்
இந்த தொட்டால் சிணுங்கிக்கு

●
நதி செதுக்கிய நேர்த்தி
கண்டு ரசிக்கிறேன்
கூழாங்கற்கள்



- தமிழ் தம்பி

●
சேற்றுக்குள் மூழ்கியும்
சுத்தமாக இருக்கிறது
தாமரை மொட்டு



நஸீரா எஸ்  ஆப்தீன்

●
மிட்டாய் வியாபாரியின் குரல்
இனிமைக்குப் பதில் கசக்கிறது
நீரிழிவுப் போராளி



கந்தநாதன் சண்முகம்

●
படிக்கல்லின் பாரம் குறைந்தது
தராசுத் தட்டில்
காந்தம்

●
மணிமணியாய் மழை
குடைக்குள்
சீலையில் ஓட்டை

●
தலையிலடித்தால் தான்
ஏறுமென்று தெரிந்திருக்கிறது
சுத்தியலுக்கு

- அப்துர்ரஹ்மான் ஏறாவூர்





●
மழை நாள்
பசியுடன் கழிகிறது
தினக்கூலியின் பொழுது

- ராஜிலா ரிஜ்வான்

●
யானையோ, துறவியோ...
திரிந்தும் அமர்ந்துமென! மெய்மற,
தூரத்தே மலையுச்சி

●
அவிழும் விடியலில்
வனம் விட்டு வெளியேறுகின்றன
இரு பறவைகள்!

- வதிலைபிரபா



●

குழந்தையின் குதூகலம்
மழைத்துளி தேக்கிய குளம்
மிதக்கும் கப்பல்.



- கலைவாணி

●

மருத்துவமனை  சென்றதும் சிகிச்சை
உடனே ஆரம்பமாகிறது
பணம் கட்டுதல்



- அ.மாப்பிள்ளை ராவுத்தர்

●

கடித்த குற்றத்திற்காக
கழற்றி விடப்பட்டது.
புதுச்செருப்பு.

●

மேடான  சாலையில்
மெள்ள எட்டிப் பார்க்கிறது
காலைச் சூரியன்.

●

ஊருக்குள் வெள்ளம்
உருக்குலைந்து போகும்
மனிதர்கள் வாழ்வு



- அனுராஜ்.

●
திருமண மண்டபம்
நிறைந்து வழிகிறது
குப்பைத்தொட்டி

●
தப்புத்தப்பாய்ப் பேச்சு
சிரித்து மகிழ்கிறேன்
மழலை மொழி.

- மக்கொனையூராள்



●
பிடுங்கிய பல்
வேதனையைத் தருகிறது
மருத்துவக் கட்டணம்

- ம.ஞானசம்பந்தன்





●
கடமையை செய்யும் முன்
பலன் கிடைக்கிறது
ஓட்டுக்கு பணம்

- ஆத்தூர் சாகுல்

●
ஏர்க் கலப்பை
மண்ணைத் தளர்வாக்க நகரும்
மண்புழு

- நாகை. ஹாஜா



●

வேண்டுதலுக்கு ஏந்திய
கைகளுக்குள் விழுந்தது
அம்மாவிற்கு பிடித்த பூ

●

நினைவு நாளில் எங்கிருந்தோ வந்தமர்ந்தது
அம்மா உணவிடும் இடத்தில்
தெரு நாய்

●

வெளிநாட்டுப் பயணம்
போர்த்திக் கொண்டேன்
அம்மாவின் சேலை



ஷர்ஜிலா பர்வீன்

●

மழை நின்றதும்
மொட்டை மாடியில் தெரியும்
மலையில் நீரோட்டம்



- ஸ்ரீவி. முத்துவேல்

●

வாகன நெருசலில்/
தெளிவின்றித் தெரிகின்றது/
முன்னால் காதலியின் முகம்/



அறூபா அஹ்லா

●

குருவிக்கூடுகள்
அம்மன்கோயில் வேம்பை வளைக்கும்
தொட்டில்கள்!

●

காகங்களை விரட்டாதீர்கள்
வீட்டருகே தழைக்கட்டும்
இளைப்பாற்றும் மரங்கள்!

●

களத்துமேடு
ஆங்காங்கே சிதறிய நெல்மணிகள்
ஒத்தியெடுக்கும் பாட்டி!



ஹைக்கூ உமா

●

அகன்ற மரம்
அழியாமல் அப்படியே
அன்றெழுதிய பெயர்

●

நீரில் அமிழ்ந்த எருமை
மூழ்கவேயில்லை
நெற்றியில் அமர்ந்த பறவை



சிவகாமசுந்தரி நாகமணி
சென்னை

# ஹைக்கூ திண்ணை முந்தைய இதழ்களும் விமர்சனப் பார்வைகளும்

மே - 2021 (ஆசிரியர் : கா.ந.கல்யாணசுந்தரம் )



நூற்றுக்கணக்கான ஹைக்கூ கவிஞர்கள் தனது உயிர்ப்புள்ள படைப்புகளுடன் இளைப்பாற இடம் அளிக்கிறது ஹைக்கூ திண்ணை..

அளப்பரிய பணிகளை செய்து வரும் கவிச்சுடர் கா.ந கவிச்சுடர் கா.ந. கல்யாணசுந்தரம் ஐயாவையும்.. தமிழ்நெஞ்சம் அமின் அவர்களையும் வாழ்த்தி வணங்குகிறேன்..

எனது படைப்புகளுக்கும் இடம் அளித்த மைக்கு நெஞ்சு நிறை நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.. அனைவருக்கும் மனமார்ந்த வாழ்த்துகள்..

... சாரதா சந்தோஷ்

ஜூன் - ஜூலை 2021 (தொகுப்பாசிரியர் : ராஜூ ஆரோக்கியசாமி)



ஹைக்கூ கவிஞன் கி.சார்லஸ் பற்றிய என் கட்டுரையைப் பக்க அளவு பற்றிய கவலையின்றி ஏழு பக்க அளவில் வெளியிட்டிருக்கும் உங்கள் அன்புக்குத் தலை வணங்குகிறேன் ஐயா!

... வெற்றிப்பேரொளி

சிறப்பு

மின்னிதழில் ஹைக்கூ நூல் அறிமுகம் / மதிப்புரை செய்து வைக்கலாமே ஐயா

... கவித்தா சபாபதி

ஆகஸ்ட் - செப் 2021 (தொகுப்பாசிரியர் : சாரதா சந்தோஷ்)



வடிவமைப்பு கண்ணையுங் கருத்தையுங் கவர்கிறது. பொறுப்பாளர்கள் அனைவருக்கும் வாழ்த்துகள்

வாகை சூடிய கவிஞர்களுக்கும் வாழ்த்துகள்

ஹைக்கூ திண்ணையில் முதல் ஆளாய் என்னை அமர்த்தியது அளவற்ற மகிழ்வுகளும், தலை வணக்கங்களும்.

ஐயா,கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம் அவர்களுக்கு மனம் நிறைந்த நன்றிகள்.

... இறைச்சிக்குளம் ந.ந.சங்கரலிங்கம்

அக்டோபர், நவம்பர் டிசம்பர் - 2021
(தொகுப்பாசிரியர் : அன்புச்செல்வி சுப்புராஜு)



அக்டோடபர், நவம்பர், டிசம்பர் ஹைக்கூ திண்ணை மின்னிதழ் வடிவமைப்பு மிகவும் அற்புதம். தொகுப்பா சிரியர் கவனமாக ஹைக்கூ கவிதைகளைத் தேர்வு செய்திருக்கிறார். தேர்வு செய்யப்பட்ட ஹைக்கூக்கள் அனைத்தும் சிறப்பானவை.

பதியும் அனைத்துக் கவிஞர்களின் ஹைக்கூக்கள் மின்னிதழில் இடம்பெற வேண்டுமென்ற அவசியம் இல்லை. குறை வாக இருந்தாலும் மிகத்தரமான ஹைக்கூக்ககளை இடம்பெறச் செய்தல் அவசியம். அப்பொழுதுதான் அனைவரும் மொத்த மின்னி தழினை வாசிப்பார்கள். இன்னும் இலக்கியம் தரத்தை நோக்கி நகரும்.

மொத்தத்தில் தரமான இதழினை வாசித்த உணர்வுகிடைத்திருக்கிறது. மேலும் மேலும் சிறப்பான மின்னிதழினை வெளியிடவும்

இதற்குப் பின்னால் உழைத்த அனைவருக்கும் பேரன்பின் வாழ்த்துகள்

... கவி. விஜய்

## ஜனவரி பிப்ரவரி 2022 (தொகுப்பாசிரியர் : அனுராஜ்)



விளையாடின கவிதைகள்,
கூடிமகிழ்ந்தனர் கவிஞர்கள் -
ஹைக்கூ திண்ணை!?

… தி. கிருஷ்ணமூர்த்தி !

சிறப்பு..

## மார்ச் - ஏப்ரல் 2022 (தொகுப்பாசிரியர் : கவிஞர் கவிநிலா மோகன்)



தொகுப்பாசிரியருக்கு நல்வாழ்த்துகள் அழகான வடிவமைப்பில் வழக்கமாய் அசத்தும் தமிழ்நெஞ்சம் அமின் அவர்களுக்கு வாழ்த்தும் பாராட்டும். ஹைக்கூ கவிஞர்களை ஒவ்வொருவராக தேர்வு செய்து திண்ணையை தொகுத்து வழங்கும் தொகுப்பாசிரியராக பதவி உயர்வு வழங்கும் ஐயா கல்யாணசுந்தரம் அவர்களுக்கு நன்றியும்.. வாழ்த்தும்.

… அனுராஜ்

## மே - ஜூன் 2022 (தொகுப்பாசிரியர் : கா.ந.கல்யாணசுந்தரம்)



மிகவும் அருமையாக வெளிவந்திருக்கிறது» ஹைக்கூ திண்ணை இதழ்».

இனிய வடிவமைப்பு...
இனிய கவிதைகள்
இனிய கட்டுரைகள்...

இதழின் தொகுப்பாசிரியர் கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம் ஐயா அவர்களுக்கும், தமிழ்நெஞ்சம் இதழின் ஆசிரியர் கவிஞர்அமின் ஐயா அவர்களுக்கும்,, இனிய நிர்வாகி அவர்களுக்கும், இதழின் ஆசிரியர் குழுவினருக்கும், இனிய ஆலோசகர்களுக்கும், இடம் பெற்றிருக்கும் கவிகளுக்கும் இதயம் நிறைந்த நன்றிகளும், வாழ்த்துகளும்…

… ஐ. தர்மசிங்



சிறப்பான வடிவமைப்பு, சிறந்த தொகுப்பு... இதழில் இடம் பெற்றுள்ள அனைத்துக் கவிஞர் பெருமக்களுக்கும் அன்பினிய நல்வாழ்த்துகள்

... அன்புச்செல்வி சுப்புராஜூ



கடவுளுக்கும் பிணத்துக்கும்
சாத்திய மாலைகள் சேர்ந்தேகிடந்தன
குப்பைத் தொட்டியில்

ராமசாமி நாதன்



பிள்ளையார் சுழி போட்டு
எழுதத் தொடங்கினேன்
பெரியார் பற்றிய கவிதையை

பாலமுரளி, பெரியகுளம்

வயதான காலம்
குளிரும் இரவில் ஆறுதலாய்
நெருப்புச் சட்டி

யாருமில்லை
குடை பிடிக்க நனைகிறது
புத்தர் சிலை

எஸ்.எம்.றிஸ்வான்
இலங்கை

●
விதம் விதமாக
நிலவை வெட்டி ரசிக்கிறது
அசையும் இலை



●
பூவில் விழுந்த
மழைத்துளியும் பூத்திருக்கிறது
சிறு பூவாக

●
ஓவியம்
புன்னகைத்து ரசிக்கிறது
வரைந்து ரசிக்கும் ஓவியனை

●
எங்கோ பாடும் குரல்
ஆதரவற்ற குழந்தை கேட்கிறது
கண்களைத் துடைத்தபடி

●
சுடும் வெயில்
குழந்தைக்கு கிட்டியது குடை
அப்பாவின் நிழல்

சா. கா. பாரதி ராஜா

தமிழ்நெஞ்சம்

&

உலகத் தமிழ் ஹைக்கூ கவிஞர்கள் மன்றம்

இணைந்து வழங்கும் "ஹைக்கூ திண்ணை"